# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 12 ஆம் ஞாயிறு | 21 ஜூன் 2026


**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: **திருஅவை - ஒருங்கிணைந்து வாழ்தல்**



# ஒருவருக்கொருவர் செவிகொடுத்தல்

ஒரு சிறிய பொறி ஒரு திட்டத்தையும், ஒரு இயக்கத்தையும் தொடங்கவைக்கிறது. மேலும் அதைப் பகிர்ந்துகொள்ள ஒருவரை அனுமதிக்கிறது. பின்னர் கேட்பவரின் மனநிலை அங்கு இடம்பெறுகிறது. அவர் மற்றவரின் புனிதத்தை ஏற்றுக்கொண்டு, தூய ஆவியானவரிடம் உண்மையாகக் கேட்கிறார். இதுபோன்ற ஒன்று நமது நடைமுறை சமூகங்களில் எவ்வாறு வடிவம் பெறுகிறது?

சமூகப் பகுத்தறிவு இயக்கங்கள் யாவை? செவிகொடுத்தல் எனும் புனிதமான செயல் ஒரு தொடக்கம் மட்டுமே. . பகிர்ந்துகொள்ளப்பட்டதும்., கேட்கப்பட்டதும் இப்போது இதயத்திலும் ஆவியானவரிலும் பற்றிக்கொள்ளப்படவேண்டும். அப்போது தான் கடவுள் சமூகத்தை எங்கே வழிநடத்துகிறார் என்பதை நாம் அனைவரும் சேர்ந்து அடையாளம் காணத் தொடங்கமுடியும்.

Celebrate Listen Walk (cf. Is 2:2-5) MPC2026

**இன்றைய இறைவார்த்தை:**
எரேமியா 20: 10-13
திருப்பாடல் 69: 8-10, 14, 17, 33-35
உரோமையர் 5: 12-15
மத்தேயு 10: 26-33

சமூகப் பகுத்தறிவின் முதல் நடவடிக்கை, சரணடைதல் ஆகும். ஆவியானவரில் உரையாடும் அனுபவத்திற்குள் நுழைவது என்பது குழுவிற்கு ஆழமான சிந்தனைகளையும், பங்களிப்புகளையும் வழங்குவது அல்ல, ஆனால் 'சொல்ல விரும்புவதை' எப்படி இருக்கவேண்டும்' என்பதை ஆண்டவரிடம் சரணடைவதே ஆழமான பணியாகும். அப்படியானால், மேலோங்கி நிற்கும் கேள்வி இதுதான். " நாம் ஒன்றாகக் கண்டறிந்து, பின் தொடர்ந்துசெல்ல ஆவியானவர் எதற்கு அழைக்கிறார்? பிறர் தெரியப்படவேண்டும் என்பதற்காக, நமது திட்டங்கள், யோசனைகள், மற்றும் எண்ணங்களை விட்டுக்கொடுக்க நாம் தயாராய் இருக்கிறோமா? இந்த அர்ப்பணிப்பை ஏற்றுக்கொள்வது, கிறிஸ்துவின் ஒரே உடலாக நாம் உண்மையாக செயல்படவும் வளரவும் உதவும் ஒரு கொடையாகும்.

இரண்டாவது நடவடிக்கை, அனைத்தையும் உள்ளடக்குதல் ஆகும். நியமனம் செய்யப்பட்டவர்கள், நாம் கண்ணால் பார்ப்பவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள், ஆகியோரிடம் தூய ஆவியார் பேசுவார். நாம் சற்றும் எதிர்ப்பார்த்திராத இளைஞர்கள், சிறியவர்கள் சற்றும் எதிர்பார்க்காதவர்கள் மூலமாகவும் ஆவியானவர் பேசுகிறார். நாம் ஆவியானவருக்கு உண்மையாகத் திறந்த மனதுடன் இருந்தால், கண்ணுக்குப் புலப்படாதவர்கள், கவனிக்கப்படாதவர்கள், விளிம்புநிலையில் இருப்போர் மற்றும் காயமடைந்தவர்களிடமிருந்து தெளிவு வரக்கூடும். ஒருவேளை, ஒன்றாகப் பகுத்தறிதல் என்பது, நாம் குரல்களுக்கு முழுமையாகத் திறந்த மனதுடன் இருப்பதையும், அவற்றை உண்மையாகக் கருத்தில் கொள்வதையும், நாம் அடிக்கடி கவனிக்கத் தவறும் மற்றும் குறைத்து மதிப்பிடும் நபர்கள் மூலமாகவும் கடவுள் நம்மிடம் பேசமுடியும் என்று நம்புவதையும் குறிப்பிடலாம்.

மூன்றாவது நடவடிக்கை, பொறுப்பெடுத்துக்கொள்ளுதல் ஆகும். ஒரு முயற்சி, அதைச் செயல்படுத்துவதற்கான உந்துதல் மற்றும் முறையுடன் இணைந்தால், அது தானாகவே கடினமானதாக இருக்கலாம். நாம் செய்யத் தொடங்கியதற்குப் பொறுப்புக் கூறுவதே எல்லாவற்றிலும் மிகவும் சவாலானது. சமூகத்தின் இதயத்திற்கும், நமது செவிகள் கூர்மையாக இருப்பதையும் நமது முயற்சிகள் சமூக உறுப்பினர்களுக்கு எவ்வாறு உதவுகின்றன, பாதிக்கின்றன, புறக்கணிக்கின்றன அல்லது நிலைநிறுத்துகின்றன என்பதையும் உறுதிப்படுத்த, பின்விளைவுகளுக்கு திறந்த மனதுடன் இருப்பதும் செம்மைப்படுத்துவதும், சிந்திப்பதும் அவசியமாகும்.

இது வெறுமனே முடிவெடுப்பதையும் தாண்டிச் செல்கிறது. கிறிஸ்துவின் உடலின் வழியாக வெளிப்படுத்தி வழிநடத்தும் தூய ஆவியானவரால் உருமாற்றப்படுவதற்குத் திறந்த மனதுடன் இருப்பதே அது. நமது சமூகப் பகுத்தறிவு அப்போது மனமாற்றமாக மாறுகிறது.

மீண்டும், நம்மை நாமே உண்மையுடன் கேட்டுக்கொள்ள வேண்டும்: நாம் விரும்பும் பின் விளைவுகளை விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கிறோமா?

யாரும் தமது சொந்தக் கருத்துக்களைத் திணிக்கக் கூடாது; நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் செவிசாய்க்க வேண்டும். யாரும் விலக்கப்படவில்லை; நாம் அனைவரும் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளோம். முழுமையான உண்மை யாரிடமும் இல்லை; நாம் அனைவரும் அதைத் தாழ்மையுடன் தேட வேண்டும், மேலும் அதை ஒன்றாகத் தேட வேண்டும்.

*- திருத்தந்தை 14 ஆம் லியோ*


INTERNAL CIRCULATION ONLY
BUL 25/2026

**வெளியீடு:** மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org